සබරගමුව පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
சபரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்
Sabaragamuwa Provincial Department of Education

மூன்றாம் தவணைப் பரீட்சை 2018 — தரம் 11

**First Term Test 2018** — **Grade 11**

| | | |
|---|---|---|
| விவசாயமும் உணவுத் தொழிநுட்பமும் | ஐஐ | இரண்டரை மணித்தியாலம் |
| Agriculture & Food Technology | II | Two Hours |

தரம் - 10 விவசாயமும் உணவுதொழிநுட்பவியலும்

**முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. **வடமத்திய மாகாணத்திலே விவசாயி ஒருவர் தனது 3 எக்டேயர் நிலப்பரப்பில் பயிர்ச்செய்கையை மேற்கொள்ள தீர்மணித்தார். நிலத்தின் ஒருபகுதி சற்று சரிவானது.**
    1. இந்த நிலத்தில் ஆரம்பபண்படுத்லுக்காக பயன்படுத்தப்படும் இயந்திர வலு, விலங்குவலு உபகரணம் ஒன்று வீதம் தருக?
    2. சரிவான நிலப்பகுதியில் மண்ணரிப்பை தடுக்க பயன்படுத்தப்படும் முறைகள் இரண்டு தருக?
    3. அவர் பயிர்செய்திருந்த பீர்க்கு பயிரில் சென்நிற ஈ எந்நேரமும் பறந்து திரிவதை காணக் கூடியதாக இருந்தது.
        1. அப் பூச்சலியின் பெயர் யாது?
        2. அப் பூச்லியின் பாதிப்பு யாது?
    4. இப் பயிர் நிலத்தில் பறந்து காணப்படும் மண்வகை யாது?
    5. இப்பயிர் நிலத்தில் பயிரிடப்பட்டுள்ள சொலனேசியேகுக்கபிற் றேசியே குடும்ப பயிர்கள் ஒன்று வீதம் தருக?
    6. இந் நிலத்தில் ஒரு பகுதியில் தென்னை பயிரிடப்பட்டிப்பதோடு மண் மணல் மண்ணாகவும் உள்ளது. மணல் மண்ணிற்கு மிகவும் பொருத்தமான நீர்பாசன முறையாது?
    7. இந் நிலத்தில் பயிரிடப்பட்டுள்ள தக்காளியின் விளைச்சல் அதிகம் என்பதால் அதனை பாதுகாத்து வைக்கும் முறைகள் இரண்டு தருக?
    8. குளத்தின் மூலமே இந்நிலத்திற்கு நீர் பாய்ச்சப்படுகிறது. குளத்தின் நீர் வெளியேறும் போது அதன் அமுக்கத்தை கட்டுப் படுத்துவது யாது
    9. இந்நிலத்தில் பயிரிடப்பட்டுள்ள வெண்டி செடியின் இலைகளில் மஞ்சள் கலந்த பச்சைநிற சித்திர வடிவம் தோன்றி காணப்பட்டது. இந்நோய்க் காரணி யாது?
    10. இங்குள்ள நாற்று மேடையில் சில நாற்றுக் கள் அடிப்பகுதி அழுகி காணப்பட்டது. இதற்கு காரணமான நோய் யாது ?
2. **இலங்கையின் ஈரவலயத்தில் மே தொடக்கம் செப்டம்பர் வரை அதிக மழைவீழ்ச்சியுடன் கூடிய காலநில நிலவுகிறது.**

    I. இக்கால எல்லைக்குள் பயிரிடப்படும் பயிர்ப் போகம் எது?

இப் போகத்தில் மழை கிடைக்கும் முறையை பெயரிடுக.

II. மழைவீழ்ச்சியை அளப்பதற்காக சாதாரண மழைமாணி ஒன்றை வரைந்து பகுதிகளுக்கு பெயர் குறிக்குக?

III.

a. கூடுதலான காற்றினால் பயிர்களுக்கு ஏற்படும் பாதிப்புக்கள் இரண்டு தருக?

b. மழைகாலங்களில் சூழற் காரணிகளை பரிபாலனம் செய்ய பயிர்ச் செய்கையில் மேற்கொள்ள வேண்டிய தொழிநுட்ப முறை யாது?

c. இம்முறையினால் பரிபாலனம் செய்யப்படும் சூழற் காரணிகள் இரண்டு தருக?

IV. மேற்பரப்பு நீர்பாசன முறையின் நன்மைகள், தீமைகள் இரண்டு வீதம் தருக?

3. **பயிர்ச் செய்கையில் சிறந்த விளைச்சளைப் பெற்றுக் கொள்வதற்கு பூச்சிப் பீடைகளின் தாக்கத்தை குறைத்துக் கொள்வதற்கு மண், நீர், வேறூடகம் பசளை, இயந்திர உபகரணங்ள், ஆகியவற்றை முகாமைத்துவம் செய்தல் வேண்டும்**

I.

a. பயிர்ச் செய்கையில் களைகளை அழிப்பதற்கு பயன்படுத்தப்படும் முறைகள் இரண்டு தருக?

b. களைகட்டலை மேற்கொள்ள பயன்படுத்தப்படும் மணித வலுவினால் இயக்கப்படும் உபகரணங்கள் 2 தருக.

II. சொலனேசியே குடும்பப் பயிர்களில் பாதிப்பை ஏற்படுத்தும் பக்றிறியா நோயை குறிப்பிட்டு நோயின் அறிகுறிகள் இரண்டு தருக?

III.

a. பயிர்களின் வளர்ச்சி அவத்தையில் கூடுதலாக தேவைப்படும் மூலகம் யாது ?

b. இந்த மூலக குறைபாட்டு அறிகுறிகள் இரண்டு தருக?

IV. பயிர்ச் செய்கையின் போது பயன்படுத்தப்படும் பசளையின் வினைத்திறனை அதிகரிக்க கவணத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் 2 தருக?

4. **நீர் எமது சிறந்த வளமாகும். பயிர்ச் செய்கையின் போது நீர் முகாமைத்துவம் செய்வதன் மூலம் தாவரத்திற்கு தேவையான போசனையை பெற்றுக் கொள்வது இலகுவாகும்.**

1 a. மண்ணிலிருந்து நீர் இழக்கப்படும் முறைகள் இரண்டு தருக.?

b. மண்ணிக்கு மூடுபடை இடுவதற்க பயன்படுத்தப்படும் இயற்கை மூடுபடை செயற்கை மூடுபடை பொருட்கள் இரண்டு வீதம் எழுதுக.?

11 a. சிறந்த நீர் வடிப்பின் அனுகூலங்கள் 2 தருக?

b. பிரதான நீர் வடிப்பு முறைகள் 2 தருக?

111 a. பயிர்களுக்கு தேவையான மாபோசனை, நுண் போசனை இரண்டு வீதம் தருக?

b. நீங்கள் அறிந்த திரவ சேதனப்பசளை வகைகளை தயார் படுத்தும் முறையை சுருக்கமாக விளக்குக?

**5. ஒரு விவசாயி தனது வயலில் விதைப்பதற்காக சிறந்த விதை நெல்லைபெறுவதற்கான ஆலோசனையை கமநல சேவைகள் திணைக்களத்தில் பெற்றுக் கொண்டார். பெற்றுக் கொண்ட தகவல்கள் படி**

I.

a.விதை நெல் கொண்டிருக்க வேண்டிய சிறப்பியல்புகள் 2 தருக.?

b.இவர் நாற்று மேடை மூலம் நாற்றுக்களை பெற முயற்சிப்பாராயின் அவர் தயாரிக்கும் நாற்று மேடை வகைகள் 2 தருக

II. நெற் செய்கையின் பின் கண்காணிப்பு நடவடிக்கைகள் 4 தருக?

III. நெற் செய்கைக்கு பயன்படுத்தப்பட்டும் சேதன வகைகள் 2 தருக?

IV. நெற் செய்கையை மேற் கொண்ட சில காலங்களின் பின் வயலின் இடை விட்ட இடங்களில் தத்திகளின் பாதிப்பு ஏற்பட்டது.

a.இப்பாதிப்பிற்கு காரணமான பீடையின் பெயர் யாது?

b.இப்பாதிப்பு எவ்வாறு அழைக்கப்படும்

c.இப்பாதிப்பை கட்டுப் படுத்த எடுக்கப்படும் நட வடிக்கைகள் 2 தருக?

**6. விவசாயி ஒருவர் விற்பனைக்காக மரக்கறி, பழக் கன்றுகளை உருவாக்குவதற்கு தண்டுத்துண்டங்கள் இழைய வளர்ப்பு முறையை கையாண்டார்.**

I.

a.மரக்கறி வித்துக்களை நாற்று மேடையில் இடுவதற்காக பயன்படுத்தக் கூடிய நாற்றுச் சாடி வகைகள் 4 தருக?

b.தண்டு துண்டங்களை வேர் விடச் செய்தலை தூண்டுவதற்காக பயன்படுத்தப்படும் ஓமோன் வகைகள் 2 தருக?

II.

a.ஒட்தலின் போது ஒட்டுக் கட்டை, ஒட்டுக்கிளை என்பன கொண்டிருக்க வேண்டிய இயல்புகள் 2 வீதம் தருக?

b.நிலத்திற்கு வளைக்க முடியாத தாவர கிளையை வேர்விடச் செய்வதற்காக செய்யப்படும் செயற்பாட்டை படம் ஒன்றின் மூலம் குறித்துக் காற்றுக?

III. விவசாயி தண்டுத் துண்டங்கள் மூலம் நாற்றுக்களை பெற எளிய சூரிய இணப்பெருக்கி முறையை பயன்படுத்தினர்

a.விவசாயினால் பயன்படுத்தப்பட்ட வேர் ஊடாக பொருள் யாது?

b.போலித்தீன் கூடாரத்தில் வெப்பநிலை பரிபாலனம் செய்யும் முறைகள் 2 தருக

**7. முன்னைய காலம் தொட்டு இற்றை வரைஉருவாகியுள்ள பல்வேறு விவசாய முறைகள் பயிர் செய் முறைகள் என்பன பாவனையில் இருப்பதோடு வளர்ச்சியடைந்த நாடுகலுடன் இலங்கை போன்ற நாடுகளை ஒப்பிட்டு பார்க்கையில் விளைச்சளின் பாதிப்பு 20 வீதம் - 40 வீதம் வரை அதிகரித்துள்ளது.**

I. இலங்கையில் விவசாயிகள் பின்பற்றும் விவசாய முறைகள் 2 தருக?

II.

a.இடைப் பயிர்ச் செய்கை என்றால் என்ன?

b.இதற்கு உதாரணங்கள் 2 தருக?

III. அறுவடைக்கு பிந்திய இழப்புக்களில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் 2 தருக?

IV. அறுவடைக்கு பிந்திய இழக்குக்கள் ஏற்படும் சந்தர்ப்பங்கள் இரண்டு தருக?

V. அறுவடைக்கு பிந்திய இழப்புக்களை குறைத்துக் கொள்வதற்காக அரசினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளில் ஒன்று தரு?